# சேவா வாணி



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம்

தமிழ்நாடு - தெற்கு


மே 2023

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

என் அன்பிற்குரியவர்களே!

காமம் மற்றும் பேராசை, கோபம் மற்றும் வெறுப்பு ஆகியவற்றை அகற்றி, மனதைத் தூய்மைப்படுத்திக் கொள்ள, நீங்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு ஆன்மீக சாதனையைப் பின்பற்ற வேண்டும். அகந்தைக் கிணற்றிலிருந்து வெளியே வாருங்கள். பரமாத்மாவின் பிரபஞ்சக் கடலில் நீந்துங்கள். நீங்களும் அதில் ஓர் அங்கம்தான். தூய்மையான, தெய்வீகச் சூழலை சுவாசிக்க உங்கள் மனதைக் கட்டாயப்படுத்துங்கள் (அல்லது மென்மையாக வற்புறுத்துங்கள்). ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு மூச்சிலும், இறைவனையும், அவர் புகழையும் நினைவு கூறுங்கள். இறைவனின் ஏதாவது ஒரு நாமத்தை மனனம் செய்து கொண்டே இருங்கள்.



அன்புடனும், அருளுடனும்,
- பாபா

# ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம்,தமிழ்நாடு தெற்கில் இருந்து 3 பிரிவுகளிலும் மொத்தம் 89 தனித்துவமான செயல்பாடுகள் மே 2023 நடந்தன

## கல்வி பிரிவு

13

## சேவை பிரிவு

52

## ஆன்மீகப் பிரிவு

24

# திருநெல்வேலி

# பாலவிகாஸ் கலை நிகழ்ச்சி மற்றும் மாத்ரு பூஜை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**68**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**–**

பகவானின் பேரருளால், ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு, **1-5-23** அன்று, மாத்ரு பூஜையுடன் பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.



# திருப்பூர்

## ஆன்மீக பண்பாட்டு பயிற்சி முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை 40**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை 120**

பகவானின் பேரருளால் இந்த வருடத்திற்கான ஆன்மீக பண்பாட்டு பயிற்சி முகாம் மே மாதம் 26ஆம் நாள் துவங்கி 28ஆம் நாள் வரை சிறப்பாக நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் 120க்கும் மேற்பட்ட குழந்தைகளும் 20 குருமார்கள் மற்றும் 20 சமிதி அமைப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் என 170 பேர் கலந்து கொண்டனர். மூன்று நாட்களும் சாய் பஜனைகளுடன் துவங்கி கோயில் வழிபாடு, தியான வகுப்பு, ஆசைக்கு ஒரு உச்ச வரம்பு, உள்ளரங்கு விளையாட்டுகள், தெய்வ ப்ரீத்தி பாத பீதி சங்க நீதி, விவாத அமர்வுகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் குழந்தைகள் மிகவும் உற்சாகத்துடன் தொய்வின்றி சிறப்பாகக் கலந்து கொண்டனர் என்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது





# திருப்பூர்

## 98 சிறப்பு சாய் பஜனை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
50

பயனைடைந்தோர் எண்ணிக்கை
-

மே மாதம் 4 ஆம் தினமானது நமது அன்பு பகவான் பாபா அவர்கள் திருப்பூர் மாவட்டத்திற்கு விஜயம் செய்த சிறப்பு தினம். அதை முன்னிட்டு பாலவிகாஸ் குருமார்கள் மாலை 04.00 மணிக்கு 98 சிறப்பு சாய் பஜனைகளை பி.என். ரோட்டில் உள்ள ராம் நகர் மந்திரில் சமர்ப்பித்தனர். அதைத் தொடர்ந்து காந்தி நகர் சமிதியைச் சேர்ந்த பாலவிகாஸ் குழந்தைகள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

## உழவாரப் பணி

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
31

பயனைடைந்தோர் எண்ணிக்கை
-

திருப்பூர் மாவட்டம், கொங்கு நகரில் உள்ள ஸ்ரீ பால முருகன் கோவிலில் காலை 09.30 முதல் மதியம் 01.30 வரை 14.05.23 ஞாயிறு அன்று முத்து நகர் சமிதி சார்பில் 31 சேவாதல்கள் கொண்டு உழவாரப் பணியானது மிகவும் உற்சாகத்துடன் நடைபெற்றது.








# திருப்பூர்

## கண் சிகிச்சை முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 50 | - |

திருப்பூர் மாவட்டம் ஸ்ரீ சத்ய சாய் சேவா சங்கம் மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனையும் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் ஞாயிறு **07.05.23** அன்று பி.என் ரோட்டில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் விஹாரில் சுவாமியின் அருள் ஆசியுடன் சிறப்பாக நடைபெற்றது






### ஸ்ரீ சத்ய சாய் பக்தர்களின் உன்னத சேவை!

**திருப்பூர், மே 8–**

ஸ்ரீ சத்ய சாய் சேவா மையம், அரவிந்த் கண் மருத்துவமனை, மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் சார்பில், ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமை இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப் படுகிறது.

அவ்வகையில், நடப்பு மாதத்துக்கான இலவச கண்புரை அறுவை சிகிச்சை முகாம், பி.என்., ரோடு, மில்லர் ஸ்டாப், ஸ்ரீ சத்ய சாய் சேவா மையத்தில் நேற்று நடந்தது.

காலை, 8:00 முதல் மதியம், 1:00 மணி வரை நடந்த முகாமில், 245 பேருக்கு கண் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு, கண்ணின் தன்மை குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. 45 பேர் உயர்சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

■ திருப்பூர், பி.என்., ரோடு, மில்லர் ஸ்டாப், ஸ்ரீசத்ய சாய் சேவா மையத்தில், இலவச கண் சிகிச்சை முகாம் நேற்று நடந்தது.

# திருப்பூர்

## ஈஸ்வரம்மா தின கொண்டாட்டங்கள்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
450

பயனைடைந்தோர் எண்ணிக்கை
–

ஈஸ்வராம்பா தின கொண்டாட்டங்கள் **06.05.23** தினத்தன்று பி.ன்.ரோட்டில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் விஹாரில் மாலை **4.30** மணிக்கு வேத பாராயணத்துடன் துவங்கி, சாய் பஜனை மற்றும் பால விகாஸ் குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர், பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் மஹா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நிறைவடைந்தது. இவ்விழாவில் பால விகாஸ் குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.





திருப்பூர்

# லட்டு தயாரிப்பு சேவா

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**31**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**–**

ஈஸ்வராம்பா தினத்திற்காக கொடைக்கானல் சாய் ஸ்ருதியில் நடக்க இருக்கும் நாராயண சேவையை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டம் சார்பில் லட்டு தயாரிப்பு சேவை பி.என். ரோட்டில் உள்ள ஶ்ரீ சத்ய சாயி விஹாரில் நடைபெற்றது. இதில் மொத்தம் **6021** லட்டுக்கள் தயாரிக்கப்பட்டு, சுவாமியின் பொற்பாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.





## திருப்பூர்

# நீர் மோர் விநியோகம் சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**50**

பயனடைந்தோர் எண்ணிக்கை
**1000**

ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு, பி.என் ரோடில் உள்ள ஸ்ரீ சத்ய சாயி விஹாரில் நீர் மோர் விநியோகம் சேவை மற்றும் சாய் காயத்ரி ஜபம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல்லடம் ரோடு யூனிட் **2**, ராம் நகர், முத்துநகர் மற்றும் காந்திநகர் சமிதிகள் சார்பில் காலை **10.00** மணி முதல் மதியம் **12.00** மணி வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.






## திருப்பூர்

# பால விகாஸ் குழந்தைகளுக்கான விளையாட்டு விழா

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**50**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**1000**

ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு பாலவிகாஸ் குழந்தைகளுக்கான விளையாட்டு விழா **01.05.23** அன்று பின் ரோட்டில் உள்ள ஸ்ரீ சத்ய சாயி விஹாரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள் இணைந்து நன்முறையில் நடத்தினர்.





# தூத்துக்குடி

## நீர்மோர் விநியோகம்

> பங்கு பெற்றோர் எண்ணிக்கை
> **16**

> பயனைடைந்தோர் எண்ணிக்கை
> **850**

சுவாமியின் ஆராதனை விழாவை முன்னிட்டு கோயில்பட்டி டவுண் சமிதி சார்பாக நீர்கமார் பந்தல் போடப் பட்டது.

- இதில் **850** பேர் பயன் பெற்றனர்.
- **16** சேவாதள் கலந்து கொண்டனர்







## இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம்

> பங்கு பெற்றோர் எண்ணிக்கை
> **15**

> பயனைடைந்தோர் எண்ணிக்கை
> **97**

**457**ஆவது இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம் நடைப்பெற்றது. **92** பேர் பயன் பெற்றனர். மருத்துவர்கள் மற்றும் **15** சேவாதளத் தொண்டர்கள் கலந்து கொண்டனர். வருகை தந்திருந்த நோயாளிகளுக்கு நாராயண சேவை நடைப்பெற்றது.

தூத்துக்குடி

# திருவிளக்கு பூஜை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
-

பயனைடைந்தோர் எண்ணிக்கை
1,197

தூத்துக்குடி மாவட்டம் கமுகாசலபுரம் கிராம கோயில் திருவிழாவை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடைப்பெற்றது. இதில் 40 பேரும் மகிளா செவாதல் 7 பேர் பங்கு பெற்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் இனாம்மணியாச்சி கிராமத்தில் கோயில்பட்டி டவுண் சமிதி சார்பாக திருவிளக்கு பூஜை நடைப்பபற்றது. இந்த பூஜையில் 350 பக்தர்கள் கலந்துக்கொண்டனர். இதைப்போல் கோயில்பட்டி மணியாச்சி கிராம கோயிலிலும் திரு விளக்கு பூஜை நடைப்பற்றது. இதில் 800 பக்தர்கள் கலந்துகொண்டனர்.







## தூத்துக்குடி

# கோடைக்கால பண்பாட்டு சிறப்பு முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**82**

**பயனடைந்தோர் எண்ணிக்கை**
**–**

கோடை கால விடுமுறை முன்னிட்டு, கோவில்பட்டி சமிதி சார்பாக, கோடைக்கால பண்பாட்டு சிறப்பு முகாம் **7** தினங்கள் நடைப்பெற்றது. இம்முகாமில் சராசரியாக **82** மாணவர்கள் கலந்து கொண்டனர். **11** தலைப்புகளில் சிறப்பு சொற்பொழிவுகள் நடைப்பெற்றன. மே **6** –அன்னை ஈஸ்வராம்பா தினத்தன்று வந்திருந்த மாணவர்கள் அனைவரும் தங்கள் பெற்றோருக்கு பாத பூஜை செய்து, இறுதி நாளன்று வந்திருந்த குழந்தைகள் பெற்றொர்கள், அனைவரும் ஸ்வாமிக்கு ஆரத்தி எடுத்தனர்.



# தேனி

## மருத்துவமனை சேவை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**-**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**40**

சாய்ராம் தெய்வத்தாய் ஈஸ்வரம்மா அன்னை அவர்களது நினைவு தினத்தை முன்னிட்டு **6.5.2023** அன்று பெரியகுளம் அரசு மருத்துவ மனையில் உள்ள மனநலம் குன்றியவர்களுக்கு சுமார் **40**நபர்களுக்கு பிஸ்கட்டுகளும் மிக்ஸ்சர் போன்ற சிற்றுண்டிகள் பெரியகுளம் சத்திய சாயி சேவா சமிதியின் சார்பாக வழங்கப்பட்டது.





## ஈரோடு

# சிவன் பார்வதி திருக்கல்யாணம் மற்றும் ஏகாதச ருத்ர ஜெபம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
50"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
-"

ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் கூகலூர் கிராமத்தில் ஸ்ரீ மரகதவல்லி சமேத மத்தியபுரீஸ்வரர் கோவிலில் மே மாதம் 27 மற்றும் 28 ஆகிய இரண்டு நாட்களில் சிவன் பார்வதி திருக்கல்யாணம் மற்றும் ஏகாதசி ருத்ர ஜெப அபிஷேகம் மகா ருத்ர யாகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது இதில் நமது ஸ்ரீ சத்ய சாயி சேவா மகளிர் குழு சுமார் 50 பேர் கலந்துகொண்டு மிகச்சிறந்த சேவை செய்தனர்.மே மாதம் 26 ஆம் தேதியே கோவில் மற்றும் சுற்றுப்புறங்களை தூய்மைப்படுத்தி, கோவில் பூஜை சாமான்களை தூய்மைப்படுத்தி பூஜைக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர். 27ஆம் தேதி காலை கோவிலில் கோலம் போடுதல், பூக்களை தொடுத்தல், வந்திருந்த பக்தர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப அவர்கள் இருந்த இடத்திற்கே தண்ணீர் கொடுத்து சேவை புரிந்தனர், மற்றும் பக்தர்களுக்கு வழங்கப்பட்ட உணவுகளை சரியான படி அமைதியாக வேகமாக பரிமாறி சிறப்பான பணியாற்றினர். ருத்ர பாராயணம் செய்ய வந்தவர்களுக்கு இரவு உணவு பேக்கிங் செய்து கொடுத்து அனுப்பினர்.



ஈரோடு

# ஈஸ்வரம்மா தின சிறப்பு நிகழ்ச்சிகள்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 250 | - |

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து சமிதிகளிலும் நம் சுவாமியின் அன்னை ஈஸ்வரம்மாவின் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலையில் ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம், ஸ்ரீ சத்திய சாயி ஸஹஸ்ரநாம அர்ச்சனை, நாராயண சேவை, மாலையில் சிறப்பு பஜனை பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி என விமர்சையாக கொண்டாடினர். பழனிபுரம் ஸமிதியில் அன்னைக்கு பாத பூஜை, பவானிசமிதி பாலவிகாஸ் குழந்தைகள் ஜெகத் குரு ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய மாத்ருகா பஞ்சகத்தை பாடினார்கள். எல்லா சமிதிகளிலும் அன்னை ஈஸ்வரம்மா பற்றி பாலவிகாஸ் குழந்தைகள், குருமார்கள் பேசினார்கள். பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளை தொடர்ந்து சிறப்பு பஜனை மங்கள ஆரத்தியுடன் பிரசாதம் விநியோகிக்கப்பட்டது.

இந்த தினத்தன்று ஈரோடு மாவட்ட பாலவிகாஸ் குழந்தைகள் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் ஸ்ரீ சத்யசாய் ஆனந்த வாணி வலையொளில் "அன்னை கேட்ட வரமே சாயின் சங்கல்பம்" என்ற தலைப்பில் ஈஸ்வரம்மாவின் மேன்மையை பற்றியும் அவரை பின்பற்றி பாலவிகாஸ் குழந்தைகள் எடுத்துக் கொள்ள வேண்டிய சங்கல்பத்தை பற்றியும் ஒரு கலந்துரையாடலாக சுவாமியின் பொற்பாத கமலங்களில் சமர்ப்பித்தனர்

# ஈரோடு

## பிரசாந்தி சேவை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**212**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**-**

பகவானின் பெரும் கருணையால் தங்களை புத்துணர்ச்சி செய்து கொள்ள ஈரோடு மாவட்டத்திலிருந்து சாயி அன்பர்கள் மே **2023** மாத பிரசாந்தி சேவையில் கலந்து கொள்ள மகிழ்ச்சியுடன் கிளம்பினர். இதில் ஃபர்ஸ்ட் பேட்சில் **46** ஆண்கள் மற்றும் **65** பெண்கள் செகண்ட் பேச்சில் **40** ஆண்கள் மற்றும் **61** பெண்கள் கலந்துகொண்டு சேவை புரிந்தனர். இங்கு சேவை புரிந்த ஆண்களில் **35** பேர் முன்னாள் பால விகாஸ் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.ஈரோடு பெண்களுக்கு என்றே பிரத்தியேகமாக ஈஸ்வரம்மா சமாதியில் அன்னை ஈஸ்வரமா தினத்தை ஒட்டி அங்கு கோலம் போடும் வாய்ப்பை பரிசாக அளித்தார் நம்பகவான. அவர்களும் தங்கள் கைவண்ணத்தை காட்டி வண்ண வண்ண கோலங்களை போட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வியக்க வைத்தனர்



ஈரோடு

# மஹிளா தினம் திருவிளக்கு பூஜை

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 15 | - |

மஹிளா தினத்தை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடைபெற்றது பார்க் சமிதியில் 7 பேர் விளக்கு பூஜையில் பங்கு கொண்டனர். மூலப்பாளையம் சந்நிதியில் மஹிளா தினத்தை முன்னிட்டு மாலை 6.15 மணி முதல் 7.15 வரை ஸ்ரீ மகாலட்சுமி பூஜை,மகிலா பூஜை ஸ்ரீலட்சுமி, ஸ்ரீ லட்சுமி அஷ்டோத்திரம், ஸ்ரீ சத்ய சாயி அஷ்டோத்திரம், லட்சுமி அஷ்டகம், 2 பஜனை பாடல்கள் பாடி மங்கள ஆரத்தியுடன் பூஜையை நிறைவு செய்தனர். 15 சாயி சகோதரிகள் கலந்து கொண்டனர். பிரசாதம் வழங்கப்பட்டது.



ஈரோடு

# மருத்துவ சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
-

பயனைடைந்தோர் எண்ணிக்கை
40

ஈரோடு கிழக்குசமதியின் கிராமப்புற சேவையாக தீரன் நகர் சீரடி பாபா கோவிலில் மாதந்தோறும் இலவச மருத்துவ முகாம் நடைபெறுகிறது. அனைவருக்கும் பிபி ,சுகர் செக் செய்து மாத்திரைகள், வைட்டமின் பாட்டில் போன்றவை வழங்கப்படுகிறது இதில் 40 பேர் பயன் பெற்றனர்



## ஈரோடு

# மகளிர் சுயதொழில் பயிற்சி

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–

பயனைடைந்தோர் எண்ணிக்கை
35

பகவானின் அருளால் கவுண்டன்புதூர் சமிதி மகளிர் சுயதொழில் பயிற்சியை சிறப்பாக **10-3 -2023** முதல் செய்து வருகிறார்கள். பெண்களுக்கு ஆரி எம்ராய்டரி **( Aari embroidery work)** சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இதில் **35** பெண்கள் பயன் பெற்று வருகிறார்கள் அவர்கள் ஆர்வமாக கற்றுக் கொண்டதை புகைப்படம் எடுத்துள்ளார்கள்



ஈரோடு

# ஈரோடு மாவட்ட அளவிலான 98 தொடர் பஜன்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 100 | - |

பகவானின் பெரும் கருணையால் 21 5 2023 அன்று ஈரோடு மூலப்பாளையம் சமிதியில் 98 தொடர் பஜன் சிறப்பாக நடைபெற்றது ஈரோடு மாவட்ட பல்வேறு சமிதிகளை சேர்ந்த பாடகர்கள் சாய் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர் சுவாமியின் அலங்காரம் ;ஒலி, ஒளி அமைப்புகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது. பஜன் நிறைவு பெற்றவுடன் அனைவருக்கும் சுவாமி பிரசாதம் வழங்கப்பட்டது இதில் கலந்துகொண்டு புத்துணர்ச்சி பெற்ற அனைவரின் சார்பாக பகவானிடம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



## ஈரோடு

# உழவார பணி

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
35

பயனைடைந்தோர் எண்ணிக்கை
-

நமது பகவானின் பெருங்கருணையால் **21-5-2023** அன்று கூகலூரில் உள்ள ஸ்ரீ மத்தியபுரீஸ்வரர் கோவிலை சுத்தம் செய்யும் சேவை உழவாரப் பணியை காலை **8** மணிக்கு தொடங்கி மதியம் **3** மணி அளவில் நிறைவு செய்யப்பட்டது இதில் மாவட்ட சேவை ஒருங்கிணைப்பாளர்- ஆண்கள் ,மாவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பாளர்- ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்



# ஈரோடு

## கோயில் உண்டியல் எண்ணும் சேவை

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 21 | - |

பகவானின் அருளால் பண்ணாரி அம்மன் கோயில் உண்டியல் என்னும் சேவை நம் ஈரோடு சாயி அன்பர்களுக்கு கிடைத்தது. இதில் 19 மஹிளாகளும் 2 ஆண்களும் கலந்து கொண்டு தங்கள் சேவையை புரிந்தனர் அம்மனின் ஆசியை கொடுக்க வழி வகுத்த சாய்நாதனுக்கு நமஸ்காரங்கள்.



## வாசகர் வட்டம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 30 | - |

நம் பகவானின் பெருங்கருணையால் 28 -5- 2023 அன்று வாசகர் வட்டத்தில் "அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம்" என்ற தலைப்பில் மிக அழகாக Sri prof.Dr.T.S. பாலகிருஷ்ணன் அவர்கள் உரை நிகழ்த்தினார். இதில் ஈரோடு மாவட்டம் அல்லாது மற்ற மாவட்டங்களில் இருந்தும் கலந்து கொண்டு கேள்விகள் கேட்டு பதில்களை பெற்று சிறப்பாக ஆன்லைன் மூலம் நடைபெற்றது சிறப்பாக நடைபெற்ற இந்த வாசகர் வட்டம் 1 மணி நேரம் 20 நிமிடங்களில் நிறைவு பெற்றது. இதை யூட்யூபிலும் கேட்கலாம்.

ஈரோடு

# பள்ளி பால விகாஸ் குருமார்கள் பயிற்சி முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 20 | – |

நம் அன்பிற்குரிய பகவானின் பெரும் கருணையால் பள்ளி பால விகாஸ் குருமார்களுக்கான மாதாந்திர பயிற்சி முகாம் மூலப்பாளையம் சமிதியில் இனிதே நடைபெற்றது இதில் 13 மஹிளா குருமார்களும் ஒரு ஆண் குருவும் கலந்து கொண்டனர் அனைவருடைய பங்களிப்பும் அருமையாக இருந்தது இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த பகவானுக்கு நம் நன்றிகளை காணிக்கையாக்குவோம்



# கரூர்

## கணினி பயிற்சி வகுப்பு

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
2

பயனடைந்தோர் எண்ணிக்கை
10

கரூர் மாவட்டத்தில் ஸ்ரீ சத்ய சாய் காயத்ரி நிவாஸ் வெங்கமேடு சமிதியில் பாலவிகாஸ் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கணினி பயிற்சி வகுப்பு நடைபெற்றது, இதில் **4** மாணவர்கள் **6** மாணவிகள் கலந்து கொண்டனர்.



## ஸஹஸ்ர நாம அர்ச்சனை & நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
10

பயனடைந்தோர் எண்ணிக்கை
50

கரூர் மாவட்டத்தில் **06.05.2023** ஆம் தேதி ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு காந்திகிராமம் சமிதியில் சாயி ஸஹஸ்ர நாம அர்ச்சனையும் சிறப்பு பஜனையும் நடைபெற்றது, அதனைத் தொடர்ந்து கரூர் தாந்தோணிமலை பெருமாள் கோவிலில் **50** நபர்களுக்கு நாராயண சேவை செய்யப்பட்டது.




கோயமுத்தூர்

# ஸ்ரீ சத்திய காளியம்மன் திருக்கோவில் பாலாலய வைபவம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
178"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
-"

பகவானின் பெரும் கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம், குப்பநாயக்கன்பாளையம் அருள்மிகு ஸ்ரீ சத்திய காளியம்மன் திருக்கோவிலின் (நம் ஸ்வாமியின் திருக்கரங்களினால் **8.5.1989** அன்று பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்மன்) பாலாலய வைபவம் சென்ற **3.5.2023** மற்றும் **4.5.2023** ஆகிய இரு தினங்களில் வெகு சிறப்பாக நடந்தேறியது. இதில் கிராம மக்கள் மற்றும் சாய் பக்தர்கள் பலர் கலந்து கொண்டார்கள். ஜெய் சாய்ராம்.





# கோயமுத்தூர்

## ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகள்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
82

பயனடைந்தோர் எண்ணிக்கை
140

ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு கீழ்கண்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலை பால விகாஸ் குழந்தைகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. 06/05/2023 1. காலை 05.00 மணி முதல் 6.30 மணி வரை. ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகர சங்கீர்த்தனம். பங்கேற்றவர்கள் :ஆண்கள் : 6 மகளிர் : 3 2. மதியம்: 12.00 மணி முதல் 1.30 வரை "அன்புமலர்", உடல் ஊனமுற்றோர் இல்லத்தில் சாய் பஜனை, வஸ்த்ர தானம் மற்றும் நாராயண சேவை பயனாளிகள் : 70 ஆண் சேவாதளர்கள்: 4 3. ஈஸ்வரம்பா தினத்தன்று, பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள். இடம் - அன்னபூரணிப் பேட்டை சமிதி - மேட்டுப்பாளையம். பால விகாஸ் குழந்தைகள் தங்களது பெற்றோர்களுக்கு பாத பூஜை செய்யும் நிகழ்ச்சி, பாலவிகாஸ் க்ரூப் 1, 2 மற்றும் 3 குழந்தைகளின் ஸ்லோகம், வேதம், யோகா, பகவத் கீதை , சொற்பொழிவு, கீபோர்ட் இசை, பரதநாட்டியம் மேலும் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பங்கேற்றவர்கள்: 78 ஆண்கள் : 15 மகளிர் : 35 குரு : 4 பாலவிகாஸ் குழந்தைகள் : 28 மாணவர்கள் : 10 மாணவிகள் : 18 ஆண் சேவாதளர்கள்: 4 மகளிர் சேவாதளர்கள் : 5





கோயமுத்தூர்

# மந்திர் பிரவேச தினம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
-

பயனடைந்தோர் எண்ணிக்கை
70

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர் சமிதியில், சென்ற 08-05-2023 திங்கட்கிழமை அன்று போத்தனூர் சமிதிக்கு ஸ்வாமி அவர்கள் மந்திர் பிரவேசம் செய்த 34வது ஆண்டைக் குறிக்கும் வகையில் "மந்திர் பிரவேச தினம்" மிகசிறப்பாக கொண்டாடப்பபட்டது. அன்று காலை 5.00 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம், நகரசங்கீர்தனமும், 6.00 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றமும் அதைத் தொடர்ந்து ஹோமங்களும் நடைபெற்றதன. பின் மாலை நிகழ்ச்சியாக வேத பாராயணம் மற்றும் சிறப்பு பஜனை நடைபெற்றது. இதில் கோவை மாவட்டத் தலைவர் கலந்து கொண்டு ஆன்மீக உரை நிகழ்த்தினார். காலை நிகழ்ச்சியில் 28 மகளிர், 24 ஆண்கள் மற்றும் 18 பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர். மாலை நிகழ்ச்சியில் பக்தர்கள் பலர் பங்கு கொண்டார்கள். ஜெய் சாய்ராம்





கோயமுத்தூர்

# இலவச பொது மருத்துவ முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
3

பயனடைந்தோர் எண்ணிக்கை
11

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் பரிபூரண ஆசியுடன் **07-05-2023** ஞாயிற்றுக் கிழமை காலை, சரவணம்பட்டி ஊரிலும், பிற்பகல் தொட்டிப்பாளையம் கிராமத்திலும் மாதாந்திர இலவச பொது மருத்துவ முகாம் சிவானந்த காலணி சமிதி மற்றும் பீளமேடு சமிதி சார்பாக மிகசிறப்பாக நடைபெற்றது.



## தஞ்சாவூர்

# நீர்மோர்/பானகம் வழங்கும் சேவை

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 10 | - |

ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி சாவடி சார்பாக மோர் விநியோகம் நிகழ்ச்சி நடைபெற்றது



# பாலவிகாஸ் கலை நிகழ்ச்சி

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 50 | - |

ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் பாலவிகாஸ் கலை நிகழ்ச்சி நடைபெற்றது





## தஞ்சாவூர்

# வஸ்த்ர தானம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**13**

**பயனடைந்தோர் எண்ணிக்கை**
**90**

**6** மே **2023** அன்று ஈஸ்வரம்மா தினத்தைக் கொண்டாடும் விதமாக கும்பகோணம் சமிதி, கும்பகோணம் மாவட்ட அரசு மருத்துவமனையில், பிறந்த குழந்தைகளுக்கு **98** புதிய சட்டைகளும், பிஸ்கட்களும் வழங்கியது . சமிதியின் மகளிர், பிரசவ வார்டுகளுக்குச் சென்று அனுமதிக்கப்பட்ட பெண்களிடம் பகவானின் படம், விபூதி பிரஸாதத்துடன் அளித்தனர். மூன்று சேலைகளும் வழங்கப்பட்டன. பகவானுக்கு நன்றி.



# தஞ்சாவூர்

## நீர்மோர் விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
20

பயனைடைந்தோர் எண்ணிக்கை
27,480

கோடை காலத்தை முன்னிட்டு நமது மாவட்டம் சார்பாக மார்ச் மாதம் 15 ஆம் தேதி முதல் மே மாதம் 29 ஆம் தேதி வரை நீர் மோர் விநியோகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 27,480 பயனாளர்கள் பயன் அடைந்துள்ளனர். இந்த சேவையில் பங்கு கொண்ட அனைவருக்கும் பகவானின் பரிபூரண அருள் கிடைக்க பிரார்த்திக்கிறோம் சேவாதளத் தொண்டர்கள் ஆண்கள் 6 நபர்கள், மகளிர் 6 நபர்கள், முன்னாள் மாணவர்கள் 3 நபர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் 5 நபர்கள் சேவையில் கலந்து கொண்டார்கள்.



## நீலகிரி

# ஸ்ரீ நாகராஜர் கோயில் குண்டம் திருவிழாவில் சேவைப்பணி

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**54**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**50,000**

பகவனின் பேரருளால், **01-05-2023** அன்று மேற்கண்ட திருவிழாவில், கூட்ட நெரிசல் கட்டுப்படுத்துதல், காலை **11.00** மணி முதல் மாலை **4.30** மணி வரை சுமார் **50,000** த்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் பரிமாறுதல் முதலிய சேவைப்பணிகள் நம் சேவாதள தொண்டர்களால் ஆற்றப்பட்டன. **36** ஆண் மற்றும் **18** பெண் சேவாதளர்கள் கலந்துகொண்டனர்.





நீலகிரி

# ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டங்கள்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–

பயனைடைந்தோர் எண்ணிக்கை
300

பகவானின் பேரருளால் ஈஸ்வராம்பா தின விழா **06-05-2023** அன்று சாய்கைலாசில் பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைப்பெற்றது. கலந்து கொண்ட அனைத்து பாலவிகாஸ் குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், சமிதிகள் அமைந்துள்ள ஊர்களின், தலைவர்கள் **40** பேர் சிறப்பு விருந்தினார்களாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டத்துடன், வயது முதிர்ந்த ஏழ்மையான பக்தர்களுக்கு வஸ்த்திர தானமும் அளிக்கப்பட்டது. சுமார் **300** பேருக்கு நாராயணசேவை செய்யப்பட்டது. கருணைக்கடலாகிய நமது ஸ்வாமியின் தரிசனம், ஊஞ்சல் தொடர்ந்து ஆடுவதன் மூலம் உணரப்பட்டது. ஜெய் சாய்ராம்.





நீலகிரி

# சாய் கைலாஸ் ஆண்டு விழா

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை 20**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை 65**

பகவானின் பேரருளால் **23-05-2023** அன்று சாய் கைலாஸின் பதினோராவது ஆண்டு நிறைவு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. வழக்கம் போல் வேதம், பஜனை மற்றும் சத்சங்கம் நடைபெற்றது. சாய் கைலாஸ் கோயில் வருவதற்கு உதவி செய்தவர்களில் ஒரு சிலர் கௌரவிக்கப்பட்டார்கள். தொடர்ந்து நாராயண சேவை நடைபெற்றது. மேலும் சிறப்பு நாராயண சேவையாக அன்று மாலை சுமார் **22** கிலோமீட்டர் தொலைவில் நஞ்சநாடு கிராமத்திலுள்ள போப் பால் மெர்சி ஹோமில் உடல் ஊனமுற்ற **65** நபர்களுக்கு இரவு உணவு **20** சேவாதளர்களால் வழங்கபட்டது. ஜெய் சாய்ராம்.



# நீலகிரி

## நீலகிரி மாவட்டத்தில் கோடை முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| - | 65 |

பகவானின் பேரருளால் 6 வது முதல் 10 வது வரை படிக்கும் மாணவர்களுக்கான கோடை முகாம் " இந்திய கலாச்சாரம் மற்றும் ஆன்மிகம் " என்னும் தலைப்பில் 25-05-2023 முதல் 27-05-2023 முடிய மூன்று நாட்கள் சாய் கைலாஸில் சிறப்பாக நடைபெற்றது. கோடை முகாம் 25ம் தேதி மாலையில் வரவேற்புடன் துவங்கியதது. 26 மற்றும் 27 ஆகிய இரு நாட்களில் எல்லா மாணவர்களும் அதி காலையில் எழுந்து சரியாக 5.20 மணிக்கு நடைபெற்ற ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தில் கலந்து கொண்டார்கள். யோகா வகுப்பும் இடம் பெற்றிருந்தது. முதல் நாள் வகுப்பு இரவு 7.00 மணி வரையிலும் இரண்டாம் நாள் இரவு 8.00 மணி வரையிலும் மூன்றாம் நாள் மதியம் இரண்டு மணி வரையிலும் நடைப்பெற்றது. பேச்சாளர்கள், இந்திய கலாச்சாரத்தின் சாராம்சம், ஸ்வாமியின் வாழ்க்கை மற்றும் செய்தி, ஐந்து மனித பண்பாடுகள், ராமாயணத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் மற்றும் கல்வியின் முடிவு ஒழுக்கம் ஆகிய தலைப்பில் சிறப்பாகப் பேசினார்கள். மேலும் மனித வள மேம்பாட்டு விளையாட்டுக்கள் மற்றும் வினாடிவினா இடம் பெற்றது. 65 மாணவர்கள் பெரும்பான்மையான சமிதிகளிலிருந்து கலந்து பகவானின் அருள் பெற்று மகிழ்ச்சியுடன் திரும்பினர். எல்லோருக்கும் லேமினேட் செய்யப்பட்ட ஸ்வாமியின் போட்டோவும் ஒரு டி-ஷர்ட்டும் அன்பு காணிக்கையாக அளிக்கப்பட்டது. ஜெய் சாய்ராம்.





# விழுப்புரம்

## சாதனா முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–

பயனைடைந்தோர் எண்ணிக்கை
–

பகவானின் ஆசியுடன் விழுப்புரம் மாவட்டத்தில் மே மாதம் புட்டபர்த்தி சேவைக்கு முதல் பிரிவில் **45** ஆண்கள்,**60** பெண்கள் மற்றும் இரண்டாவது பிரிவில் **56** ஆண்கள், **60** பெண்கள் என சிறப்பான எண்ணிக்கையில் சேவை செய்து வந்தனர். சேவைக்குச் சென்று வந்தவர்களை மாவட்ட பொறுப்பாளர்கள் நேரடியாக ஒவ்வொரு சமிதிக்கும் சென்று அவர்களை சந்தித்து சேவையில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் புரிதலையும் கேட்டறிந்தனர். மேலும் ***OCT-NOV 23*** மாதம் பர்த்தி சேவைக்கான முன்னெடுப்பாகவும் இது அமைந்தது. பகவானின் மகா பிரசாதம் அனைத்து சேவாதளர்களுக்கும் வழங்கப்பட்டது.



# விழுப்புரம்

## நீர்மோர் சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
-

பயனைடைந்தோர் எண்ணிக்கை
-

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களாக நீர் மோர் சேவை நடைபெற்று வருகிறது




## சாயி இலக்கியம் வழங்குதல்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
-

பயனைடைந்தோர் எண்ணிக்கை
-

பகவான் ஆசியுடன் விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் சமிதியில் .21/05/2023 ஞாயிற்றுக்கிழமை சமிதியின் தத்து கிராமம் புதுப்பேட்டை கிராமத்தில் காலை 11 மணிக்கு சனாதன சாரதி புத்தகங்கள் மற்றும் விபூதி பிரசாதமும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது



# விழுப்புரம்

## மாத்ரு பூஜை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–

பயனைடைந்தோர் எண்ணிக்கை
–

பகவானின் ஆசியுடன் விழுப்புரம் சமிதியில் **05.05.2023** அன்று சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு *பகவானின் பாதத்திற்கு பால் அபிஷேகமும்* ,*ஸ்ரீ சாய் காயத்ரி பாராயணமும்* *திருவிளக்கு பூஜையும்* மாலை **6:00** மணி அளவில் நடைபெற்றது. *ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு விழுப்புரம் சமிதியில் *பால விகாஸ் குழந்தைகள்* தங்களின் பெற்றோருக்கு *மாத்ரு பூஜையை* செய்தனர். அதைத்தொடர்ந்து குழந்தைகள் பஜன் பாடினர்,பிறகு ஸ்லோகங்கள் ,பகவானின் பொன்மொழிகள் ஆகியவற்றை கூறினர். வேத பாராயணம் செய்தனர். குழந்தைகளுக்கு குழந்தைகளுக்கு பிரசாதத்துடன் பரிசுகள் வழங்கப்பட்டது. நிறைவாக பகவானுக்கு *மகா மங்கள ஆர்த்தி* எடுக்கப்பட்டது



# விருதுநகர்

## மகிளா சாதனா முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 84 | - |

**28.5.2023** ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்ட அளவிலான மகிளா சாதனா முகாம் சிவகாசி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் வைத்து மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட ஆன்மீக, சேவை, கல்வி, இளைஞர் பிரிவு மகிளா ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பாலவிகாஸ் குருமார்கள் சிறப்புரை ஆற்றினார்கள். அதில் மகிளாக்கள் **67** பேரும் ஆண்கள் **17** பேரும் ஆக மொத்தம் **84** பேர் பங்கு பெற்றனர்.





## பாலவிகாஸ் குருமார்கள் பயிற்சி முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 23 | - |

சிவகாசி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் **21.05.2023** ஞாயிற்றுக்கிழமை அன்று சமிதி அளவிலான பாலவிகாஸ் குருமார்கள் பயிற்சி முகாம் மதியம் **1** மணியிலிருந்து **3** மணி வரை பேராசிரியர் **A.**தங்கமணி அவர்களால் மிகச்சிறப்பாக நடந்தப்பட்டது. அதில் **23** பேர் கலந்துகொண்டனர்.



# விருதுநகர்

## இலவச மனநல மருத்துவ முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
18

பயனடைந்தோர் எண்ணிக்கை
234

சிவகாசி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் **21.05.2023** ஞாயிற்றுக்கிழமை அன்று காலை **9** மணியிலிருந்து **1** மணி வரை **253**வது இலவச மனநல மருத்துவ முகாம் மிகச்சிறப்பாக நடந்தது. அதில் **234** பேர் பயனடைந்தனர். **31** பேர் சேவை பணியில் கலந்துகொண்டனர்.





## இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
18

பயனடைந்தோர் எண்ணிக்கை
60

சிவகாசி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் **14.05.2023** ஞாயிற்றுக்கிழமை அன்று இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம் சிறப்பாக நடந்தது. அதில் **60** பேர் பயனடைந்தனர். **18** பேர் சேவை பணியில் கலந்துகொண்டனர்.

# விருதுநகர்

## நீர் மோர் வழங்குதல்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
9

பயனைடைந்தோர் எண்ணிக்கை
250

இராஜபாளையம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் **03.05.2023** அன்று அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் கோவில் பூக்குழித் திருவிழாவை முன்னிட்டு நீர்மோர் வழங்கப்பட்டது. அதில் சுமார் **250** பொதுமக்கள் பயன் பெற்றனர்.





## கோவில் உழவாரப்பணி

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
31

பயனைடைந்தோர் எண்ணிக்கை
–

ஈஸ்வரம்மா தினவிழாவை முன்னிட்டு விருதுநகர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி சார்பாக **01.05.2023** (திங்கள் கிழமை) அன்று விருதுநகர் சொக்கநாதர் கோவில் (சிவன் கோவில்) உழவாரப்பணி காலை **8** மணி முதல் மதியம் **12** வரை நடைபெற்றது. இதில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் பெற்றோர் என **31** பேர் கலந்து கொண்டனர்.





## விருதுநகர்

# கோடைகாலப் பயிற்சி முகாம் மற்றும் ஈஸ்வரம்மா தினவிழா

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**36**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**180**

ஸ்ரீ சத்ய சாயி பாலவிகாஸ் கோடைகால சாதனா முகாம் ஏப்ரல் **27** முதல் மே **6** வரை சிவகாசி ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் வைத்து நடைபெற்றது. அதில் மொத்தம் **60** குழந்தைகள் பங்கு பெற்று யோகா, ஓவியம் மற்றும் கைவினை, ஸ்லோகம் உச்சரிப்பு, பஜன், **Moral stories and Group activities** போன்ற பல வகையான செயல்பாடுகளை பாலவிகாஸ் முன்னாள் மாணவ மாணவிகள் மற்றும் குருமார்கள் மூலம் கற்றுக் கொடுக்கப்பட்டது. சிறப்பாக பங்கு பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அனுதினமும் குழந்தைகளுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது. மே **7** ம் தேதி மாத்ரு பூஜை சிறப்பாக நடைபெற்றது. பின்னர் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.



# விருதுநகர்

## ஈஸ்வரம்மா தினவிழா

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**23**

பயனடைந்தோர் எண்ணிக்கை
**150**

ஓம் ஸ்ரீ சாய்ராம் சுவாமியின் பேரருளால் **06.05.2023** அன்று இராஜபாளையம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி சார்பில் ஈஸ்வரம்மா தின விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை ஓம்காரம், சுப்ரபாதம், நகர் சங்கீர்த்தனம், மாத்ரு பூஜை, நாராயண சேவை, மாலை சாய் பஜன், பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், பரிசு வழங்குதல் மற்றும் மங்கள ஆரத்தியுடன் இனிதே நிறைவு பெற்றது இதில் சுமார் **65** பாலவிகாஸ் குழந்தைகள் பெற்றோர்கள் குருமார்கள் மற்றும் சமிதி உறுப்பினர்கள் உட்பட மொத்தம் **150** பேர் கலந்து கொண்டனர்.





# தருமபுரி

## நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
25

பயனடைந்தோர் எண்ணிக்கை
1200

மே மாதம் 9 ஆம் தேதி கெலமங்கலம் சமிதியின் சார்பாக பட்டாளம்மன் கோவில் கிராமத் தேர் திருவிழாவை முன்னிட்டு 1200க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது. இதில் 25க்கும் மேற்பட்ட ஆண் மற்றும் மகளிர் சேவாதள தொண்டர்கள் கலந்து கொண்டு சேவை செய்தனர்.





## சத்ய சாய் சகஸ்ர நாம பாராயணம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
25

பயனடைந்தோர் எண்ணிக்கை
1200

மே மாதம் 18.05.2023 அன்று வேப்பனபள்ளி சமிதியில் உலக நன்மையை முன்னிட்டு விசேஷ சத்ய சாய் சகஸ்ர நாமம் நடைபெற்றது.

## தருமபுரி

# ஈஸ்வரம்மா தின கொண்டாட்டம்

“பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–”

“பயனைடைந்தோர் எண்ணிக்கை
–”

மே மாதம் 6ம் தேதி ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு, மாவட்டத்தில் உள்ள அனைத்து சமிதிகளிலும் சிறப்பு பஜனை நடைபெற்றது. கிருஷ்ணகிரி மெயின் சமிதி –

- பாலவிகாஸ் குழந்தைகளின் சிறப்பு வேத பாராயணம், மாத்ரு பூஜை மற்றும் சிறப்பு நாடகமும் நடைபெற்றது.
- ஈஸ்வராம்பா என்கிற தலைப்பில் பக்தர்களுக்கு சிறப்புரை மற்றும் பஜனை நடைபெற்றது. இதில் 40 குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் கலந்து கொண்டனர் ஒசூர் மெயின் சமிதி
- வேதமாதாவைப் போற்றி வேத பாராயணம்
- தேசமாதாவை போற்றி வந்தே மாதரம் என்ற தலைப்பில் பாலவிகாஸ் குழந்தைகளின் நாடகமும்
- தேகமாதாவை போற்றும் வகையில் பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் அன்னையற்கு மாத்ரு பூஜையும்
- பூ மாதாவைப் போற்றும் வகையில் பாலவிகாஸ் குழந்தைகள் மரக்கன்றுகள் தானமும்
- கோ மாதாவை போற்றும் வகையில் கோ பூஜையூம் செய்தனர் இதன் நிறைவாக பாலவிகாஸ் குழந்தைகளின் சிறப்பு பஜனை நடைபெற்றது.





தருமபுரி

# புட்டபர்த்தி புனித யாத்திரை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
105

பயனடைந்தோர் எண்ணிக்கை
–

மே மாதம் **19.05.2023** முதல் **21.05.2023** வரை வேப்பனபள்ளி மற்றும் சென்னசந்திரம் சமிதியை சார்ந்த **105** நபர்கள் புட்டபர்த்திக்குப் புனித யாத்திரை சென்றனர். இதில் வேப்பனபள்ளி சமிதியில் இருந்து **12** குழந்தைகள் மற்றும் **08** பெரியோர்களும் சென்னசந்திரம் சமிதியில் இருந்து **45** குழந்தைகள் மற்றும் **40** பெரியோர்களும் கலந்து கொண்டனர்.

# நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–

பயனடைந்தோர் எண்ணிக்கை
64

கிருஷ்ணகிரி ஹவுஸிங் போர்டு சமிதி - முதியோர் இல்லத்தில் **33** மகளிர், **3** ஆண்கள் வஸ்திர தானமும், துப்புரவு தொழிலாளர்கள் **25** பேர் மற்றும் மகளிர் **3** ஆண்கள், நாராயணச சேவை வழங்கப்பட்டது.

தருமபுரி மற்றும் சேலம்

# கலசப்பாடி கிராமத்தில் சிறப்பு மருத்துவ முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 66 | 400 |

நமது பகவானின் அருளால், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டத்தின் ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புகள், TVS SST, ஹரூர் இணைந்து, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தொலைதூர கிராமமான கலசப்பாடியில் 2023 மே 1 ஆம் தேதி பொது மருத்துவ முகாமை நடத்தியது.

கிராமத்தில் இருந்து 10 கிமீ தொலைவில் சரியான சாலை அணுகல் நிறுத்தப்படும் காடுகளுக்கு நடுவில் அமைந்துள்ள இந்த கிராமம் மிகவும் தொலைவில் உள்ளது, அதன் பிறகு சாலை சீரற்றதாகவும், செங்குத்தான பாறைகளும் சேறுகளும் நிறைந்ததாகவும், இரண்டு நீர் ஓடைகள் குறுக்கே செல்கின்றன. பயணிகளுக்கு பயமுறுத்தும் மற்றும் சவாலான நிலப்பரப்பு. கார், வேன் போன்ற சாதாரண போக்குவரத்து சாதனங்களை இந்த சாலையில் பயன்படுத்த முடியாது. கிராமத்திற்கு மக்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்ல கனரக வாகனங்கள் மட்டுமே பயன்படுத்த முடியும்.

சாய் இளைஞர் குழுவினர் நடத்திய பின்னணி சோதனையில், கிராமம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராம மக்களிடம் மருத்துவ விழிப்புணர்வு இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் தங்கள் சொந்த இரத்தக் குழுவைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அவர்களில் பலர் தலசீமியா என்ற அரிய ரத்தக் கோளாறால் பாதிக்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்ட.

# தருமபுரி மற்றும் சேலம்

கிராமத்தில் இதுவரை மருத்துவ முகாம்கள் நடத்தப்படவில்லை. ஸ்வாமியின் அபரிமிதமான அருளால், ஸ்ரீ சத்யசாய் அமைப்புகள் இந்த தொலைதூர கிராமத்தில் முதன்முதலில் மருத்துவ முகாமை நடத்தின.அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவர்களின் உதவியுடன் ,மருத்துவ முகாமில் பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், எலும்பியல், பெண்கள் மருந்து மற்றும் கண் மருத்துவம் போன்ற பல்வேறு துறைகள் இருந்தன. கிராம மக்களுக்கு பி.பி., சுகர் பரிசோதனை மற்றும் ரத்த வகைப் பரிசோதனையும் செய்யப்பட்டது.இந்த மருத்துவ முகாமின் மூலம் 400க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்தனர். பயனாளிகளில் உடனடி சிகிச்சை தேவைப்படும் 23 நோயாளிகள் கண்புரை மற்றும் பிற அறுவை சிகிச்சைகளுக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுவாமியின் ஆசியுடன் அனைத்து பயனாளிகளுக்கும் மருத்துவர்களின் பரிந்துரைப்படி மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. கிராம சமூகத்தின் மருத்துவ நிலையை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக ஊட்டச்சத்து குறைபாட்டை ஒழிப்பதற்கான மருந்துகளுடன் சாய் புரோட்டீன் பாக்கெட்டுகள் (1/2 கிலோ) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. வாய் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக பற்பசை மற்றும் தூரிகையுடன் கூடிய பல் கருவிகளும் வழங்கப்பட்டன. கிராமத்தில் நாராயண சேவையும் நடைபெற்றது.

சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் இருந்து 40 ஆண்கள் இளைஞர்கள் மற்றும் 10 மூத்த உறுப்பினர்கள், 5 மகிளா இளைஞர்கள் மற்றும் 6 மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த தெய்வீக சேவையில் 5 பால்விகாஸ் மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

எஸ்ஆர்பி ஒருங்கிணைப்பாளர், திறன் மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர், பழங்குடியினர் சேவா ஒருங்கிணைப்பாளர், இளைஞர் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

# தருமபுரி மற்றும் சேலம்

கண், நரம்பியல் மற்றும் மனநல (ஆட்டிசம்) தொடர்பான பிரச்சனைகள் போன்ற சிறப்பு தேவைகளை மையமாக வைத்து இந்த முகாமில் மாதாந்திர அடிப்படையில் பின்தொடர்தல் முகாம்களை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

இந்த அருமையான வாய்ப்பை வழங்கிய ஸ்வாமிக்கு நன்றி கூறுவதுடன், மேலும் இது போன்ற வாய்ப்புகளை எங்களுக்கு வழங்க பிரார்த்திக்கிறோம்.













# திருச்சி

## நித்ய நாராயண சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
30

பயனைடைந்தோர் எண்ணிக்கை
–

- சுவாமியின் அருளால், ஈஸ்வரம்பா தினத்தன்று, NNS இன் 3வது ஆண்டைக் குறிக்கும் வகையில், 100க்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு முழு உணவு வழங்கப்பட்டது.30 சேவாதள தொண்டர்கள் பங்குபெற்றனர்



## வஸ்த்ர தானம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
5

பயனைடைந்தோர் எண்ணிக்கை
115

- நமது சமிதியின் சாய் சகோதரிகள், சமீபத்தில் பிரசவித்த பெண்களுக்குப் புடவைகள் மற்றும் பேபி சூட்களை விநியோகிப்பதற்காக GH இல் ஒன்று கூடினர். அந்தத் தாய்மார்களுக்கு இவை மிகவும் அன்பாக அளிக்கப்ப்பட்டது.



திருச்சி

# கண் சிகிச்சை முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–

பயனைடைந்தோர் எண்ணிக்கை
77

- கோவை சங்கரா நேத்திராலயா உதவியுடன், திருச்சி இந்து மிஷன் மருத்துவமனையில் கண்புரை அறுவை சிகிச்சைக்கான மெகா கண் சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, **150** நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு **77** நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டனர்



# மூலிகைக் கஞ்சி விநியோக சேவை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
3

பயனைடைந்தோர் எண்ணிக்கை
300

- ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை மற்றும் ராஜகோபுரம் அருகில் மூலிகைக் கஞ்சி விநியோக சேவை நடைபெற்றது, இதில் சுமார் **300** நபர்கள் பயன்பெற்றனர், **3** சேவாதள அன்பர்கள் கலந்து கொண்டனர்



# திருச்சி

# தத்து கிராமங்களில் சேவா நிகழ்ச்சிகள்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 10 | 375 |

- பாலக்குறிச்சி அருகே பெத்தகோன் பட்டியில் சுவாமியின் அருளால் ஈஸ்வரம்மா தினம் இன்று கொண்டாடப்பட்டது.பாலவிகாஸ் .குழந்தைகளின் வேதமந்திரங்கள் தெய்வீக அதிர்வலைகளால் காற்றை நிரப்பியது.இதைத் தொடர்ந்து பாலவிகாஸ் குருக்களின் மனதைக் கவரும் பஜனை பாடல்கள் ஒலித்தன. மாத்ரு தேவோ பவ என்ற நாடகத்தை பாலவிகாஸ் குழந்தைகள் நடத்தியபோது ஒவ்வொரு கிராம மக்களின் கண்களும் நனைந்தன. மாநில கல்வி ஒருங்கிணைப்பாளர், பால்விகாஸின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பாலவிகாஸ் வகுப்புகளுக்கு அனுப்புமாறு பெற்றோரிடம் வேண்டுகோள் விடுத்தார் . பாலக்குறிச்சி சமிதியின் தோற்றம் குறித்து முன்னாள் சேவை ஒருங்கிணைப்பாளர் நினைவு கூர்ந்தார் .பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி மற்றும் வஸ்திர தானம், கிராம மக்களுக்கு நாராயண சேவையுடன் விழா நிறைவு பெற்றது.





திருச்சி

# ஸ்ரீரங்கம் கோவில் உண்டியல் சேவை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**113**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**–**

- ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரெங்கநாதர் கோவில் உண்டியல் எண்ணும் சேவை நடந்தது. **43** ஆண்கள், **68** மகிளாக்கள் என மொத்தம் **113** சேவாதளர்கள் கலந்து கொண்டனர்.





காஞ்சிபுரம் வடக்கு

# அரவிந்த் நகர் பஜனா மண்டலி ஆண்டு விழா

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**75**

**பயனடைந்தோர் எண்ணிக்கை**
**–**

- இந்நிகழ்ச்சியில், **40** குழந்தைகள், **10** குருமார்கள் மற்றும் **18** பெற்றோர்கள் கலந்து கொண்டனர். திருநீற்றுப் பதிகம், திருத்தொண்டர் தொகை, பக்திப் பாடல்கள் மற்றும் நாடகத்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.





காஞ்சிபுரம் வடக்கு

# பால விகாஸ் குழந்தைகளின் பெற்றோர்களுடன் சந்திப்பு

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
**120**

பயனைடைந்தோர் எண்ணிக்கை
**-**

- மே 7 ந் தேதி மாடம்பாக்கம் சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகளின் பெற்றோருடன் ஒரு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் "பாலவிகாஸ் மற்றும் அதன் சாராம்ஸம்", "வருங்கால தூண்களாகிய இளைய தலைமுறை பாலவிகால் குழந்தைகளின் வளர்ப்பு முறை", மற்றும் நம் மாவட்ட செயலாளர் திரு. கண்ணன் அவர்களின் "ஸ்வாமியினுடனான வாழ்க்கைப் பயணம்" ஆகிய தலைப்புகள் பற்றிய சத்சங்கம் நடைபெற்றது. 35க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டு பயனுற்றார்கள்: மேலும், அவர்கள் இந்த சந்திப்பின் மூலம் குழந்தைகளை பாலவிகாஸ் அனுப்புவதன் பயனை உணர்ந்ததாகவும், சுவாமியியைப் பற்றி மேலும் அறிந்து கொண்டதாகவும், தங்களுடைய சேவை ஆர்வத்தையும் மிகவும் சந்தோஷத்துடன் தெரிவித்தார்கள். மங்கள ஆர்த்தி மற்றும் நாராயண சேவையுடன் சந்திப்பு இனிதே முடிவுற்றது. ஜெய் சாய்ராம் .







# காஞ்சிபுரம் வடக்கு

## ஈஸ்வரம்மா தினம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
250"

- பகவானின் அருளால் மாடம்பாக்கம் சமிதியில் மே **6** ஆம் தேதி தெய்வத் தாய் ஈஸ்வராம்பா அவர்களுடைய நினைவு தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை நகர சங்கீர்த்தனத்துடன் தொடங்கியது. அன்று மாலை தாய்மையின் பெருமையை உணர்த்தும் விதமாக பாலவிகாஸ் குழந்தைகளால் பெற்றோருக்கு பாத பூஜை செய்யப்பட்டது. அடுத்து பாலவிகாஸ் குழந்தைகளால் பஜனைகள் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தாய் ஈஸ்வராம்பா அவர்களுடைய விருப்பத்துக்கு இணங்கி ஸ்வாமி ஏற்படுத்திய கல்வித்திட்டம், உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனை வசதிகள் மற்றும் குடிநீர்த் திட்டங்களைப் பற்றிய சத்சங்கம் நடைபெற்றது. பின் மங்கள ஆர்த்தியும், **250** பேருக்கு நாராயண சேவையுடனும் விழா இனிதே முடிந்தது






காஞ்சிபுரம் வடக்கு

# கோடைகால ஆன்மீக பாடநெறி மற்றும் மாத்ரு பூஜை

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
–"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
118"

நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்:

- நிகழ்ச்சி நடந்த மூன்று நாட்களிலும், மாணவர்களின் எண்ணிக்கை 110 முதல் 118 வரை இருந்தது.
- கடந்த ஆண்டு மாநில அளவிலான கட்டுரைப் போட்டிகள் நடைபெற்ற 6 பள்ளிகளுக்கு, மொத்தம் 1000 துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது.
- பள்ளிகளில் இருந்து டியர் ஆஃப் சீட்டுகள் வாங்கப்பட்டு, 1 வாரம் 4 நாட்கள் முன்பே அனைவருக்கும் அழைப்புகள் செய்யப்பட்டு, நிகழ்ச்சியை பற்றி விவரிக்கப்பட்டது.
- பாலவிகாஸ் குழந்தைகளின் பதிவுகள் கூகுல் படிவங்கள் மூலம் செய்யப்பட்டது.
- மூத்த குருமார்கள் டியர் ஆஃப் சீட்டுகளை பள்ளிகளை அணுகி சேகரிக்கும் பணியை மேற்கொண்டனர். இளம் குருமார்கள் எல்லாவற்றையும் தொகுத்து, குழந்தைகளை தனி தனியாக அணுகி அவர்களின் பங்கேற்பை கவனித்துப் கொண்டனர்.
- கிராமப்புற பாலவிகாஸ் குழந்தைகளும் இதில் கலந்து கொண்டனர்.
- இந்த நிகழ்ச்சி நடந்த அனைத்து நாட்களிலும் வெவ்வேறு பேச்சு அமர்வுகள் மற்றும் குழுச் செயல்பாடுகள் நடைப்பெற்றன. இறுதியில் குழந்தைகள் வினா வினாடியிலும் பங்கேற்றனர்.
- பேச்சாளர்கள், பிற மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் பிற சமிதியில் இருந்து பங்கேற்றனர்.
- கடைசி நாளில், அச்சிடப்பட்ட பங்கேற்பு சான்றிதழ் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.
- இதில் நடத்தப்பட்ட வினாடி-வினாவில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும், ஸ்ரீ சத்ய சாய் நங்கநல்லூர் சமிதியின் 25வது ஆண்டு விழாவில், பாலவிகாஸ் நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும்.

## காஞ்சிபுரம் வடக்கு

# கோடைகால ஆன்மீக பாடநெறி மற்றும் மாத்ரு பூஜை

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| - | 250 |

- பாலவிகாஸ் அல்லாத குழந்தைகளின் பெற்றோர்களிடம் பாலவிகாஸ் வகுப்புகளின் முழு விவரத்தை உள்ளடக்கிய படிவங்கள் வழங்கப்பட்டன. இது அவர்கள் குழந்தைகளை பாலவிகாஸ் வகுப்பில் சேர்வதற்கு உதவியாக அமைந்தது.
- குரூப் 4 மாணவர்கள் இருக்கை ஏற்பாடு, ஒழுக்கம் பராமரிப்பு ஆகியவற்றில் ஈடுப்பட்டனர். குரூப் 3 மாணவர்கள் நிகழ்ச்சி ஒப்பிடு மற்றும் பேச்சாளர்களை அறிமுகம் படுத்தும் பணியில் ஈடுப்பட்டனர்.
- மொத்தத்தில், பகவானின் தாமரை பாதங்களில் இந்த அன்பு மாலையை சமர்ப்பிப்பதற்கு இரண்டு மாதங்களாக மூன்று இயக்கங்களும் ஒற்றுமையாக ஈடுப்பட்டு இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்தினர்.



# காஞ்சிபுரம் வடக்கு

## மணி மண்டபம் உழவாரப்பணி

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 75 | - |

- ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் (இந்தியா) தமிழ்நாடு . காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில் மே மாதம் 21 ஆம் நாளன்று, காஞ்சிபுரம் மகாபெரியவா மணி மண்டபத்தில் உழவாரப்பணி, 75-க்கும் மேற்பட்ட சேவாதள தொண்டர்களால் சிறப்பாக செய்யபட்டது. பகவானின் பரிபூரண அருளால், சேவாதள தொண்டர்கள் மணி மண்டபம் சென்று அடைந்த கணமே வானிலை தட்பவெப்பம் வெகுவாக குறைந்து, மழையும் பெய்ய தொடங்கியது. சேவை பணி முடியும் வரை, குளிர்ந்த வெப்பநிலையே தொடர்ந்து இருந்தது. இச்சேவை கோவில் நிர்வாகத்தால் பெரிதும் பாராட்டபட்டது.









# காஞ்சிபுரம் வடக்கு

## ஈஸ்வரம்மா தினம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| - | 300 |

ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு அத்தெய்வீக தாய்க்கு பிரியமான கல்வி, ஆன்மிகம் மற்றும் சேவை பிரிவில் பல நிகழ்ச்சிகள் பல்லாவரம் சமிதி சார்பில் நடைபெற்றது. முன்னதாக நீட் தேர்வு 2023 எழுதும் மாணவர்களுக்காக பன்மதப் பிரார்த்தனை மே 5ம் தேதி, வெள்ளி அன்று நடத்தப்பட்டது. இதில் நீட் தேர்வு எழுதும் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கலந்துகொண்டு வேதம், பைபிள் மற்றும் குர்ஆனிலிருந்து சில வசனங்களை தேர்வு எழுதும் மாணவர்களின் வெற்றிக்காக ஓதி பிரார்த்தனை செய்தனர்.மொத்தம் 23 பேர் கலந்து கொண்டனர். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தலைவர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களின் வெற்றிக்காக வாழ்த்தினார். பகவானிடம் பிரார்த்தனை செய்து கொண்டார். அதன் பின்னர் சமதி ஒருங்கிணைப்பாளரின் வாழ்த்துக் காணொளி ஒளிபரப்பப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பகவான் தேர்வு குறித்து கூறிய அறிவுரைகள் காணொளியாக ஒளிபரப்பப்பட்டது. அதன் பின்னர் மருத்துவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று பகவான் கூறிய அறிவுரைகள் அவர்களுக்கு கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து சமிதியின் நீட் தேர்வு ஒருங்கிணைப்பாளர் தேர்வு சம்பந்தமான வழிகாட்டுதல்களை வழங்கி மாணவர்களுக்கு உற்சாகமூட்டினார்.ஒன்பது முறை சாயி காயத்ரி உச்சரிக்கப்பட்டு சர்வதர்ம பிரார்த்தனை மற்றும் மங்கள ஆரத்தியோடு நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக மே 6 2023 அன்று மாலை 5:30 மணி அளவில் பாலவிகாஸ் மாணவிகளின் வேத கோஷம் மற்றும் சாயி அஷ்டோத்திரத்துடன் பஜனை தொடங்கியது. பாலவிகாஸ் மாணவ மாணவிகள் இந்த பஜனையில் கலந்து கொண்டு பாடல்களை பாடினர். அதன் பின்னர், வந்திருந்த பாலவிகாஸ் மாணவ மாணவிகள் தங்கள் தாய் தந்தையருக்கு பாத பூஜை செய்து மஞ்சள் குங்குமம் அர்ப்பணம் செய்து, பூ தூவி அவர்கள் பாதங்களை வணங்கும் மாத்ரு பூஜை நடைபெற்றது.

காஞ்சிபுரம் வடக்கு

## ஈஸ்வரம்மா தினம்....

அதன்பின் கன்வீனர் ஈஸ்வரம்மாவின் கருணையைப் பற்றி உரையாற்றினார்.மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவேறியது. பகவானுக்கு நைவேத்தியம் செய்த பிரசாதம் அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது. இதில் மொத்தம் 23 பேர் கலந்து கொண்டனர். பாலவிகாஸ் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்கள் -4 பெண்கள்-8 பெற்றோர்கள் எண்ணிக்கை 7.இவ்விரண்டு நிகழ்வுகளிலும் முக்கிய பயனாளிகள் குழந்தைகளாக அமைந்தது அந்த தெய்வத்தாய், குழந்தைகளின் மேல் வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாடு மற்றும் பல்லாவரம் சமிதிக்குக் கிடைத்த ஆசீர்வாதம். பல்லாவரம் சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகளின் மூன்றாம் நாளான மே 7, 2023 ஞாயிறு அன்று பழைய பல்லாவரம் பஸ் நிறுத்தம் அருகில் நீர்மோர் வழங்கும் சேவை நடைபெற்றது. முக்கிய அனுபவம் என்னவென்றால், அங்கிருந்த ஒரு ஆட்டோ ஓட்டுனரும் பகவானின் அக்கால பக்தர் என்று கூறி சேவை செய்வதற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பையும் அளித்தார்.

மேலும் பல சேவைகளில் கலந்து கொள்ளவும் விருப்பம் தெரிவித்தார். இதில் பாலவிகாஸ் மாணவர்களும், பெற்றோரும், சமிதி சேவாதளத் தொண்டர்களும் கலந்து கொண்டு வழிப்போக்கர்களின் தாகத்தை போக்கினர். அதுமட்டுமில்லாமல் பார்வை குறைபாடு உள்ள ஆண் பெண்களின் சங்கத்திற்கு 50 புடவைகள் வஸ்திர தானமாக வழங்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் திரு சுந்தரத்தை நேரில் சந்தித்த சமிதியின் கன்வீனர் மற்றும் பொறுப்பாளர்கள் புடவைகளை அவரிடம் ஒப்படைத்தனர். அதுமட்டுமின்றி இன்னும் 58 உரிய பயனாளர்களுக்கு புடவைகள் இந்த மாதத்திற்குள் சென்று சேரும் இந்த வஸ்திர தானத்திற்கு சமிதி உறுப்பினர்கள் மட்டுமின்றி சமிதியின் மற்றோரு சேவையான நீட் பயனாளர்களும், அவர்களின் பெற்றோரும் தாமாகவே முன்வந்து உதவி உள்ளனர் என்பது பகவானின் சங்கல்பம்.


# காஞ்சிபுரம் வடக்கு

## ஈஸ்வரம்மா தினம்....

சிறிய அளவிலானது செய்ய வேண்டும் என்று முற்பட்ட போது, பகவான் தனக்கு பிரியமான **108** எண்ணிக்கையில் புடவைகள் வந்து சேர ஆசீர்வதித்தார். இத்துடன் இனிதே நிகழ்ச்சிகள் பல படிப்பினைகளை வழங்கி பகவானின் ஆசிகளுடன் நிறைவேறியது. ஜெய் சாயி ராம்.










## காஞ்சிபுரம் தெற்கு

# கண் சிகிச்சை முகாம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை
6"

"பயனைடைந்தோர் எண்ணிக்கை
98"

செங்கல்பட்டு சமிதியில் **19.5.2023** அன்று கண்புரை பரிசோதனை **&** நாராயண சேவை நடந்தன**.** இதில் **6** சேவாதளத்தொண்டர்கள் பங்குபெற்றனர்**. 98** பேர் கண் புரை பரிசோதனைக்கு வருகை தந்த பயனாளிகள் ஆவர்**. 2** பேர் கண் புரை அறுவை சிகிச்சை பயனாளிகள் ஆவர்**. 70** பேருக்கு நாராயண சேவை செய்யப்பட்டது**.**



# காஞ்சிபுரம் தெற்கு

## மாத்ரு பூஜை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
15

பயனைடைந்தோர் எண்ணிக்கை
20

பகவானின் பரிபூரண ஆசீர்வாதத்தால் பூண்டிபஜார் சமிதியில் ஈசுவரம்மா தினத்தை முன்னிட்டு சமிதியில் மாத்ரு பூஜை சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பாலவிகாஸ் குழந்தைகள் பலரும் தங்களது பெற்றோருடன் கலந்துகொண்டனர். குழந்தைகள் தங்களது பெற்றோர்களின் பாதங்களை கழுவி, சந்தனம் மற்றும் குங்குமம் பூசினர். பின்னர் பூஜை செய்து வணங்கி ஆசி பெற்றனர். இதையொட்டி பெற்றோர்கள் தங்கள் ககுழந்தைகளை ஆசிர்வதித்தனர். பூஜை முழுவதும் வேதம் ஓதப்பட்டது. பின்னர் பஜனை பாடப்பட்டு பகவான் பாபாவுக்கு மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி முடிவுற்றது. இந்த நிகழ்ச்சியில், பாலவிகாஸ் குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் சாய் அங்கத்தினர் பலரும் கலந்து கொண்டு பகவான் ஆசீர்வாதம் பெற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு

# இலவச தையல் பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**15**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**15**

பகவானின் பரிபூரண ஆசீர்வாதத்தால் பூண்டிபஜார் சமிதியில் சிறப்பு நிகழ்ச்சியாக மகளிருக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பில் - முன்றாவது குழுவில் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. வேதம் மற்றும் பஜனையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. இந்த நிகழ்ச்சியில் மகளிருக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தலைவர் திரு.சங்கரநாராயணன் சாய்ராம் அவர்கள் தலைமை வகித்தார். சிறப்பு பேச்சாளராக திருவண்ணாமலை மாவட்டத் தலைவர் திரு.நாராயணன் அவர்கள் வருகைபுரிந்து சிறப்புரையாற்றினார். மேலும் நமது காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் அணி சேவை ஒருங்கிணைப்பாளர் திருமதி.வசந்தி சாய்ராம் வருகை புரிந்து சேவையின் அவசியத்தைப் பற்றி சிறப்புரை ஆற்றினார். பகவான் அளித்த நற்சான்றிதள்களை தையல் பயிற்சி முடித்த மகளிருக்கு வழங்கினார். இப்பயிற்சியில் மகளிர் தாங்கள் கற்று தேர்ந்த பாடங்களின் அடிப்படையில் தாங்கள் தைத்த துணிகளை பகவான் இடத்தில் சமர்பித்தனர். மேலும் தங்கள் பயிற்சியின் போது ஏற்பட்ட அனுபவத்தை பகவான் இடத்தில் பகிர்ந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் தையல்பயிற்சி முடித்த மகளிர் 15 நபர்கள், தையல் பயிற்சி குடும்பதார், பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் சாய் அங்கத்தினர் பலரும் கலந்து கொண்டு பகவான் ஆசீர்வாதம் பெற்றனர். பகவான் பாபாவுக்கு மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.





# காஞ்சிபுரம் தெற்கு

# இலவச பொது மருத்துவ முகாம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**7**

**பயனடைந்தோர் எண்ணிக்கை**
**34**

பகவானின் பரிபூரண ஆசீர்வாதத்தால் பூண்டிபஜார் சமிதி சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமில் தாம்பரம் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் 1, செவிலியர் 2, பெயர்பதிவுநபர் 1 ஆகியோர் பங்கு கொண்டனர். இந்த இலவச முகாமில் இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, இதயத்துடிப்பு பரிசோதனை ஆகியன செய்யப்பட்டன. மருத்துவ ஆலோசனை மற்றும் இலவச மருந்துகள் வழங்கப்பட்டன. இந்தமுகாமில் 34 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டனர். இந்த மகத்துவமான சாய் சேவையில் சமிதி அங்கத்தினர் ஆண் உறுப்பினர் 5, பாலவிகாஸ் குழந்தைகள் 1, பெண் உறுப்பினர் 1 நபர் கலந்து கொண்டு பகவானின் ஆசீர்வாதம் பெற்றனர் .





# காஞ்சிபுரம் தெற்கு

## சத்து மாவு வழங்கும் சேவை

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**3**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**50**

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசியுடனும், நாம் என்றும் கேட்டு மகிழக்கூடிய நமது பகவானின் அடையாளமான "ஸ்வாமியின் அன்பு 1000 அன்னையர்களின் அன்பிற்குச் சமம்", என்ற கூற்றிற்கேற்ப ஸ்ரீபெரும்புதூரில் உள்ள கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்திச் சங்கம் - **Society for Educational and Economic Development (SEED)**, என்ற அமைப்பிற்கு நமது ஸ்வாமி கல்லூரியின் **(Sri Sathya Sai Institute of Higher Learning)** முன்னாள் மாணவர்கள் தயாரித்தளித்த **30 Kg – Sai Protein** (சத்து மாவு), நமது ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்களால் அந்த அமைப்பின் தலைவரிடம் வழங்கப்பட்டது. இதில் ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று நமது பகவானின் திருப்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர்.





## காஞ்சிபுரம் தெற்கு

# ஈஸ்வரம்மா தின கொண்டாட்டம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**4**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**22**

ஈஸ்வராம்பா தின வாராந்திர ஆறாவது நாள் சிறப்பு நிகழ்ச்சியாக **06/05/23** அன்று கூடுவாஞ்சேரி அரசு மருத்துவமனையில் புதிதாகப்பிறந்த குழந்தைகளுக்கு புத்தாடை மற்றும் அவர்களுக்கு தேவையான பொருட்கள் அடங்கிய பெட்டகமும் மற்றும் தாய் மார்களுக்கு சத்து மாவும் (சாயி புரோட்டீன் ) வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.






காஞ்சிபுரம் தெற்கு

# இலவச தையல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**2**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**15**

பகவானின் பரிபூரண ஆசீர்வாதத்தால் பூண்டிபஜார் சமிதியில் இலவச தையல் பயிற்சி முகாமில் பயிலும் நான்காவது மகளிர் குழுவிற்கு, இலவச தையல் உபகரணங்கள் "நியூக்குலஸ் சாப்ட்வேர்" அமைப்பு முலமாக வழங்கும் நிகழ்ச்சி **20.05.23** அன்று நடைபெற்றது. இதில் பூண்டிபஜார் சமிதி சேவை ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆன்மிக ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். தையல் வகுப்பு ஆசிரியயை மற்றும் "நியூக்குலஸ் சாப்ட்வேர்" அமைப்பு செயலர் கலந்து கொண்டு கருவிகள் வழங்கினர். **15** மகளிர் பயன் அடைந்தனர். பகவான் ஆசீர்வாதம் பெற்றனர்.



# எழுத்துத் தேர்வுக்கு உதவி செய்தல்

“பங்கு பெற்றோர் எண்ணிக்கை
1”

“பயனடைந்தோர் எண்ணிக்கை
1”

பெருங்களத்தூர் சமிதியின் மகளிர் சேவாதளத்தொண்டர் திருமதி காயத்ரி அவர்கள், பார்வைக்குறைபாடு கற்றல் திறன் குறைபாடு மற்றும் கை கால் இயக்கக்குறைபாடுகள் உள்ள இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் பயிலும் மாணவர்கள் சிலருக்கு அவர்கள் பொதுத்தேர்வு எழுதுவதற்கு உதவி புரிந்தார். அவர்கள் சொல்லச்சொல்ல அவர்களுக்காக இவர் தேர்வுகளை எழுதினார். இத்தேர்வுகள் மயிலாப்பூர் விவேகானந்தா கல்லூரி மற்றும் சட்டக்கல்லூரி ஆகிய தேர்வு மையங்களில் நடைபெற்றன.



# காஞ்சிபுரம் தெற்கு

## சாதனா முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
11

பயனைடைந்தோர் எண்ணிக்கை
–

தையல் வகுப்பு ஆசிரியை திருமதி.பிரேமா தையல் பயிற்சியாளர்களுடன், பழைய பெருங்களதூரில் அமைந்திருக்கும் ஈஸ்வரன் கோவில் இடத்தை தூய்மை செய்தல், மற்றும் கோவில் பூஜை பாத்திரங்களை துலக்கித்தருதல் ஆகிய உழவாரப்பணிகளை மேற்கொண்டார்.





## சாய் புரதம் விநியோகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
2

பயனைடைந்தோர் எண்ணிக்கை
110

காலை 10:00 மணி முதல் மதியம் 12:00 மணிவரை சாய் புரதம் சுமார் ( 110 பாக்கெட்டுகள் ) செங்கல்பட்டு அரசு மருத்துவமனை மற்றும் தாம்பரம் சானடோரியம் காசநோய் மருத்துவமனை நோயாளிகளுக்கு வழங்கப்பட்டன.



# காஞ்சிபுரம் தெற்கு

## ஈஸ்வரம்மா தினம் - மாத்ரு பூஜா நிகழ்ச்சி

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**5**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**20**

ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு சமிதியில் சிறப்பு பஜனை மற்றும் ஆராதனை நடைபெற்றது. பாலவிகாஸ் குழந்தைகள் ஸ்வாமியின் வழியில் தங்கள் பெற்றோர்களை வணங்கும் விதமாக மாத்ரு பூஜை செய்து பகவான் மற்றும் தங்கள் பெற்றோர்களின் ஆசிர்வாதத்தைப் பெற்றனர்.






# காஞ்சிபுரம் தெற்கு

## பொது மற்றும் கண் மருத்துவ முகாம்

| பங்கு பெற்றோர் எண்ணிக்கை | பயனைடைந்தோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 25 | 108 |

கரசங்கால் கிராமத்தில் பொது மற்றும் கண் மருத்துவ முகாம் 7-ம் தேதி நடைபெற்றது. சங்கரா கண் மருத்துவமனை சார்பில் கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 5 நபர்களுக்கு அன்றைய தினமே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தனர். கண் கண்ணாடிகள் 21 நபர்களுக்கும், மருந்து மற்றும் மாத்திரைகள் பங்கேற்ற நோயாளிகளுக்கும் வழங்கப்பட்டன. கலந்து கொண்ட அனைத்து நபர்களுக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. கிராம பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பயன்பெற்றனர்.













காஞ்சிபுரம் தெற்கு

# பாலவிகாஸ் குழந்தைகளுக்கான கோடை கால முகாம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
5

பயனைடைந்தோர் எண்ணிக்கை
25

**5** நாள் கோடை கால முகாம் பாலவிகாஸ் குருமார்கள் தங்கள் மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு சமிதியில் நடத்தினர். இதில் பல்வேறு பயிற்சி மற்றும் செயல்பாடுகள் குழந்தைகளுக்கு குருமார்கள் பயிற்றுவித்தனர். பெற்றோர்கள் உதவியுடன் குழந்தைகள் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் பங்கேற்று பயன்பெற்றனர்.





# காஞ்சிபுரம் தெற்கு

## கண் பரிசோதனை முகாம்

"பங்கு பெற்றோர் எண்ணிக்கை 12"

"பயனடைந்தோர் எண்ணிக்கை 32"

பகவான் பாபாவின் அருளோடு ஆரம்பாக்கம் சாய் கார்டன்ஸில் கண்புரை பரிசோதனை முகாம் நடந்தது . 32 நோயாளிகள் முகாமில் கலந்து கொண்டனர் . இதில் இருந்து 18 நோயாளிகள் இலவச கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டு பம்மல் சங்கரா கண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பிறகு 4 நோயாளிகள் அடுத்தகட்டபரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்டனர். அனைவருக்கும் காலை உணவு, தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. மேலும் சாய் பஜனை நடைபெற்றது. மதியம் 1.30 மணிக்கு பகவான் பாபாவிற்கு மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது . 18 நோயாளிகளுக்கு கண்புரை அறுவை சிகிச்சை நமது பாபாவின் ஆசீர்வாதத்துடனும், அருளுடனும் வெற்றிகரமாக நடந்து முடிந்தது



# காஞ்சிபுரம் தெற்கு

# ஸ்ரீ சத்ய சாய் நடமாடும் மருத்துவமனை

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
45

பயனைடைந்தோர் எண்ணிக்கை
80

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சார்பாக நடமாடும் மருத்துவ முகாம் ஏப்ரல் 21ம் நாள் தாம்பரம் சமிதியின் தத்து கிராமமான ஆரம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள ஸாயி கார்டன்ஸ் என்னுமிடத்தில் நடைபெற்றது. முகாமிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் தாம்பரம் சமிதி செய்திருந்தது. இம் முகாமில் கீழ்கண்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தகுந்த சிகிச்சை அளித்ததோடல்லாமல் அவர்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகளையும் எழுதி கொடுத்தனர்.மருந்து மாத்திரைகள் பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. 1. மரு. சேஷகிரி அவர்கள் மார்பு நோய் வல்லுனர். 2. மரு . ஜெயஸ்ரீ அவர்கள் 3. மரு. அனுராதா அவர்கள் குழந்தை மருத்துவர். 4. மரு. குமரேசன் அவர்கள் இம்மருத்துவ குழுவினருக்கு உதவியாக ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர், பார்வை மருத்துவர், ஊடு கதிர் இயக்கவியலாளர் போன்ற துணை மருத்துவ உதவியாளர்களும் கலந்து கொண்டு சேவை புரிந்தனர். இம் மருத்துவ முகாமிற்கு வருகை புரிந்து பயன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 80. பயனாளிகளுக்கு சேவை புரிந்திட வருகை புரிந்த சேவாதள தொண்டர்கள் எண்ணிக்கை 35 ஆகும். ஆய்வக பரிசோதனை ஊடுகதிர் பரிசோதனை கண் பரிசோதனை ஆகிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 72 ஆகும். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத் தலைவர் அவர்கள் முகாமிற்கு வருகை புரிந்து முகாம் பொறுப்பாளர்களுடன் ஒரு கலந்துரையாடல் கூட்டத்தினை நடத்தினார். அதில் முகாமினை இன்னும் சிறப்பாக எவ்வாறு நடத்துவது என்பது பற்றியும் பயனாளிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி காட்டப்பட்டு வந்திருந்த அனைவருக்கும் பகவானின் பிரசாதமாக நாராயண சேவை வழங்கப்பட்டது.

# காஞ்சிபுரம் தெற்கு





## சாய்புரதம் விநியோகம்

**பங்கு பெற்றோர் எண்ணிக்கை**
**10**

**பயனைடைந்தோர் எண்ணிக்கை**
**600**

தாம்பரம் சமிதி மகளிர் குழு **26.5.2023** அன்று குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு **150** பாக்கட் சாய்புரதம் விநியோகம் செய்தனர். சாய் புரதம் அனந்தபூர் முன்னாள் மாணவிகளின் பொருளாதார உதவியுடன் தயார் செய்யப்பட்டது. மேலும் செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு **150** கையுறைகள் மற்றும் **150** பட்டைகள் வழங்கபட்டன. பகவான் பாபாவின் ஆராதனை தினத்தை முன்னிட்டு **25.05.2023** அன்று புலிக்கொரடு கிராமத்தில் உள்ள மக்களுக்கு **150** பாக்கட் சாய்புரதம் விநியோகம் செய்யப்பட்டன.



# காஞ்சிபுரம் தெற்கு

## கோவில் உழவாரப்பணி

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
23

பயனைடைந்தோர் எண்ணிக்கை
80

பகவான் பாபாவின் ஆசியுடனும் அருளுடனும். ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு சிடி ஓ காலனி பிள்ளையார் கோவில் சுத்தம் செய்யப்பட்டது இதில் சமிதியின் ஆண்கள் , பெண்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர். மேலும் இரண்டு மரக்கன்றுகள் நடும் சேவையும் நடைபெற்றது.





## கோடைகால பயிற்சி வகுப்புகள் - இந்திய கலாசாரம் மற்றும் ஆன்மிகம்

பங்கு பெற்றோர் எண்ணிக்கை
16

பயனைடைந்தோர் எண்ணிக்கை
45

பகவான் பாபாவின் ஆசியுடனும் அருளுடனும்; மூன்று நாட்களக்கு கோடைகால சிறப்பு வகுப்பு நடைபெற்றது. இதில் பாலவிகாஸ் மாணவர்களுக்கு ஆன்மீக பாடம் , காகித கைவினை, லகு பூஜை மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. பகவான் பாபாவிற்கு மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவடைந்து பிரசாதம் வழங்கப்பட்டது.






## முக்கிய குறிப்பு

எதிர்வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற , தெளிவான புகைப்படங்களுடன் தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன் மாவட்ட தலைவர் வழியாக கீழுள்ள மின் முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்."

மின்னஞ்சல் முகவரி

ssssotnreporting@gmail.com